வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2343/ஆ1/2025 நாள். 27.05.2025.

----

பொருள் : பள்ளிக்கல்வி – 2025 – 2026 ஆம் கல்வி ஆண்டில் பள்ளிகள் திறத்தல் – தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்க கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகள் சென்னை.6. ந.க.எண்.000882/எம்1/இ1/2023 நாள்.26.05.2025

----

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த பள்ளிகள் 2025 – 2026 ஆம் கல்வி ஆண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு ஜுன் 2ஆம் தேதி (02.06.2025) பள்ளிகள் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நாளில் பள்ளிகள் துவங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிகள் திறப்பதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அனைத்து பள்ளிகளிலும் உரிய செயல்பாடுகள் மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுத்திடவும், பள்ளி திறந்த நாளன்று அனைத்து மாணவ/ மாணவிகளுக்கும் நலத்திட்டங்கள் சார்ந்த பாடப்புத்தகங்கள், சீருடைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதையும் EMIS –இல் பதிவேற்றம் செய்வதையும் உறுதிசெய்து கொள்ளுமாறு அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. வழிமுறைகள்

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர், (பொ)

வேலூர்

பெறுநர்,

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி, தொடக்கக்கல்வி, தனியார் பள்ளிகள்)
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்,

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. கோப்பிற்கு